# பத்துப்பாட்டு நூல்கள்

பத்துப்பாட்டு நூல்கள் சங்க கால பாடல்கள். சங்க காலம் என்பது முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் சார்ந்தவை.

முதற்சங்கம்: 4419 வருடங்கள், காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரை, இடம்: கடல் கொண்ட தென் மதுரையில் இருந்தது. புலவர்கள் சிவபெருமான், அகத்தியர், முருகவேள் நிதியின் கிழவன், முடிநாதராயர்.

இடைச்சங்கம்: 3700 ஆண்டுகள் - வெண்டேர் செழியன் முதல் முடத்திருமாறன் வரை இடம்: கபாடபுரம். புலவர்கள்: தொல்காப்பியர், கீரந்தை மோசிகீரனார், வெள்ளூர் காப்பியனார், நிறையன்

கடைச்சங்கம்: 1850 ஆண்டுகள் இடம்: இன்றைய கூடல் மதுரை, புலவர்கள்- நக்கீரர், சிறு மேதாவியார், சேந்தம் பூதனார், பெருங்குன்றூர் கிழார், நல்லத்துவனார்.

மேலே சொன்ன முதற்சங்க காலம், இடைச்சங்க காலம், கடைச்சங்க காலத்தை பார்க்கும் போது 10,000+2000= 12,000 ஆண்டுகளுக்கு மேல் தமிழ் பழமையான மொழி என்று அறியலாம். ஆனால் நிரூபிக்ககூடிய ஆதாரம் கிடையாது. நிரூபிக்கவேண்டுமெனில் நம் தமிழ்நாட்டில் உள்ள கீழடி, பூம்புகார், நெல்லை தேரிகாடுகளில் அகழாய்வுகளை செய்யவும், கொற்கை போன்ற துறைமுகங்கள், ஆற்று முகத்துவாரங்கள், கடல் கொண்டதாக கூறப்படும் லெமூரிய கண்டம் போன்றவற்றை கடலுக்கு அடியிலும் தேடி ஆராய வேண்டும். இதற்கெல்லாம் பல ஆயிரம் கோடிகள் தேவைப்படும். இதையெல்லாம் சாதித்து நிரூபிக்க வேண்டும் என்றால் தமிழ் இனத்தின் மீது அக்கறையும், ஆர்வமும் உள்ள தமிழ் மரபில் பிறந்த ஒரு அக்கறையுள்ள தமிழன் தமிழ்நாட்டை ஆளும் நிலை வர வேண்டும்.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி மருவினிய
கோல நெடுநல் வாடை கோல் குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

1. முருகாற்றுபடை
2. பொருநராற்றுப்படை
3. சிறுபாணாற்றுபடை,
4. பெரும்பாணாற்றுபடை
5. முல்லைப்பாட்டு
6. மதுரைக் காஞ்சி
7. நெடுநல்வாடை
8. குறிஞ்சிப்பாட்டு
9. பட்டினப்பாலை
10. மலைபடுகடாம்